**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. NO.60/2016**

**27.06.2023 - வா.சா. 1 ஸ்ரீரேகா (எ) ரேகா சத்திய பிரமாணத்தின் பேரில் 2 மற்றும் 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1ம் பிரதிவாதி என் மாமனார். என் மாமியார் பெயர் தேவசேனா. தேவசேனாவின் சகோதரர் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் மனைவி 3ம் பிரதிவாதி. 4ம் பிரதிவாதி என் மாமனாரின் சகோதரர். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலம் நான் சொல்லி தயாரிக்கப்பட்டது. 1முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையை நான் படித்துப் பார்த்தேன். எனக்கும் என் முன்னாள் கணவர் வெங்கட்ராமன் (எ) வெங்கட்டரமனன் 30.04.2009ல் திருமணம் நடைபெற்றது. பெரியோர்களால் நடத்தி வைக்கப்பட்ட திருமணம். திருமணத்தின் போது மேற்சொன்ன வெங்கட்ராமன் நடமாக்கூடிய நிலையில் தான் இருந்தார். எனக்கும் அவருக்கும் தாம்பத்திய உறவு இருந்தது..

திருமணம் முடிந்து 6 -7 மாதங்களுக்கு பிறகு அவருக்கு பக்கவாதம் நோய் வந்தது. அவருக்கு அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை கொடுக்கப்பட்டது. அதன் பின்னிட்ட ஆந்திராவில் உள்ள பலமநேரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருடைய அப்பா, சித்தப்பா, 2ம் பிரதிவாதி தேவேந்திரன் அவரை சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். சிகிச்சைக்கு எவ்வளவு செலவானது என்ற விவரம் எனக்கு தெரியாது. திருமணத்தின் போது என் மாமனார் மளிகை கடை வைத்திருந்தாக கூறினார்கள்.

அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை முடிந்த பிறகு பிஸியோதெராபி வீட்டிலேயே செய்ய சொல்லி அனுப்பி வைத்தார்கள். வீட்டிம் பிஸியோதெராபியை என் கணவர் மேற்கொண்டார். 6.2.2010 நான் என் தாய் வீட்டிற்கு வந்து விட்டேன் என்று சொன்னால் ஆஸ்பத்திரியில் இருந்து வரும்

போது என்னை வழியில் இறக்கி விட்டு விட்டார்கள். 6.2.2010ல் இருந்து நான் என் தாய் வீட்டில் தான் இருக்கிறேன். கணவர் வீட்டிற்கு செல்லவில்லை. என் கணவர் இயற்கை உபாதைகளை அவரால் தனித்து செய்ய முடியாது என்றால் சரிதான். அவருக்கு உணவு ஊட்டிவிடுவது, இயற்கை உபாதைகளை அப்புறப்படுத்துவது ஆகியவைகள் 1ம் பிரதிவாதி செய்து வந்தார் என்றால் நான் என் தாய் வீட்டிற்கு வந்த பிறகு 1ம் பிரதிவாதி செய்து வந்தார். 6.2.2010ல் இருந்து மேற்சொன்ன வேலைகளை 1ம் பிரதிவாதி தான் செய்து வந்தார்.

என்னுடைய தாய் வீடு சாதாரண ஏழ்மையான குடும்பம் என்றால் சரிதான். என் தாய் வீட்டில் இருந்து என் கணவருக்கு மருத்துவ உதவி செய்வது தொடர்பாக எந்த தொகையும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். என் கணவர் வெங்கட்ராமன் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு இருக்கும் போது 1ம் பிரதிவாதிக்கு 75 வயதுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். ஆனாலும் 1ம் பிரதிவாதி என் கணவரை குணப்படுத்துவதற்கு சிகிச்சை மேற்கொண்டார் என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி என் கணவருக்கு அப்பலோ, சி.எம்.சி, பாண்டிசேரி ஆகிய மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை கொடுத்தார் என்றால் நானும் உடன் சென்றேன். சிகிச்சைக்காக 1ம் பிரதிவாதி வங்கி கணக்கில் இருந்து பணத்தை எடுத்து செலவு செய்தார் என்றால் சரிதான். நோய் உள்ளவரை திருமணம் செய்து வைத்ததாக நாங்கள் சொத்தில் பாகம் கேட்டு தகராறு செய்ததாக சொன்னால் சரியல்ல. அதற்கு 1ம் பிரதிவாதி அவரது மகனை பார்த்து கொள்ளவும், அதன் பிறகு சொத்தில் பங்கு கொடுப்பதாக கூறினார் என்றால் சரிதான். செஞ்சி குற்றவியல் நீதிதுறை நடுவர் நீதிமன்றத்தில் M.C. 2/2012 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

அந்த நீதிமன்றத்தில் முதலில் என் கணவர் ஆஜரானார். பின்னிட்டு ஆஜராகாததால் ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பு ஆகியது என்றால் சரிதான். பின்னிட்டு நான் பணத்தை வசூலிப்பதற்காக கலெக்ஷன் பெட்டிஷன் போட்டேன் என்றால் சரிதான். அந்த கலெக்ஷன் பெட்டிஷனை என் கணவர் பக்கவாத நோயால் இருப்பதால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான்.

அதற்கு பின்னிட்டு நான் அசல் வழக்கு எண் 205/2015 செஞ்சி உரிமையியல் நீதிமனறத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் திருவண்ணாமலை கூட்டுறவு நகர வங்கியில் 1ம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் உள்ள பணத்தை பொறுத்து ஒரு இடைகால மனுவில், ஸ்டே உத்தரவு வாங்கினேன் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கை என்னுடைய மாமனார் 1ம் பிரதிவாதியின் மீதும், திருவண்ணாமலை கூட்டுறவு நகர வங்கி மற்றும் என் கணவர் ஆகியோர் பெயரில் வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் நான் தடைஉத்தரவு பெற்றதால் என் மாமனார் அவருடைய வங்கி கணக்கில் இருந்த பணத்தை எடுத்து என் கணவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றால் அவர் வேறு பணம் வைத்திருந்தார்.

வேறு பணம் செலவு செய்த பிறகு 1ம் பிரதிவாதி அவருடைய வங்கி கணக்கில் இருந்து அந்த பணத்தை எடுத்து என் கணவருக்கு சிகிச்சை அளிக்க முடியாமல் போய் விட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கை நான் தாக்கல் செய்த போது என் மாமனார் மளிகை கடை நடத்தவில்லை என்றால் அவர் 2009 முதலே மளிகை கடை நடத்தவில்லை. என் மாமனார் தாவா 4, 5, 6 அயிட்ட சொத்துகளை விற்பனை செய்து என் கணவருக்கு சிகிச்சை அளித்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாகத்தில் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். தாவா 1ம் இன சொத்து 1ம் பிரதிவாதி

தனிப்பட்ட முறையில் அவர் பெயரில் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். தாவா 2, 3 இன சொத்துக்கள் கிராம நத்த சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா 2ம் இன சொத்து என் மாமனார் பெயரில் பட்டாவும், 3ம் இன சொத்து 4ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்று சொன்னால் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்று சொன்னார்கள்.

தாவா 1 முதல் 6 இன சொத்துக்களுக்கு பட்டா, சிட்டா மற்றும் வேறு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1.1.2016ல் என் கணவர் இறந்து விட்டார். நான் தடை உத்தரவு அசல் வழக்கு 205/2015ல் பெற்றதால் 1ம் பிரதிவாதியின் பணம் வங்கியில் அப்படியே உள்ளது. 4 முதல் 6 இன சொத்துக்களை 1ம் பிரதிவாதி இவ்வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்னரே 5, 6 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

6.2.2010க்கு பிறகு என் கணவரின் மருத்துவ சிகிச்சைக்காக 2, 3 பிரதிவாதிகள் பண உதவி செய்து வந்த விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தன்னுடைய எதிருரையில் ரூ- 30 லட்சம் 2, 3 பிரதிவாதிகள் என் கணவரின் மருத்துவ செலவிற்காக கொடுத்துள்ளாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா 1ம் இன சொத்தை 1ம் பிரதிவாதி உயில் மூலமாக 25.1.2016ல் 2, 3 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் வழக்கிற்கு பின்னிட்டு நான் தெரிந்து கொண்டேன். நான் இவ்வழக்கை 2016 டிசம்பர் மாதத்தில் தாக்கல் செய்தேன். இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னரே இந்த உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதிக்கு 2, 3 பிரதிவாதிகள் தான் சவரட்சணை செய்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் என் கணவருக்கு துணை

செய்யவில்லை. 1.1.2016ல் என் கணவரின் இறப்பிற்கோ, கரும காரியத்திற்கோ செல்லவில்லை என்றால் எனக்கு சொல்லவில்லை. என் மாமனார் 21.5.2021ல் இறப்பிற்கு செல்லவில்லை, கரும காரியத்திற்கோ செல்லவில்லை என்றால் எனக்கு சொல்லவில்லை. 21.5.2016ந் தேதி 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு தாவா 1ம் இன சொத்தை எழுதி வைத்த உயில் தான் கடைசியான உயில் என்றால் அதனை பற்றி எனக்கு தெரியாது. என் மாமனார் இறந்த பிறகு உயில் அமூலுக்கு வந்து 2, 3 பிரதிவாதிகள் நாளது தேதி வரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் தடை உத்தரவு பெறாமல் இருந்திருந்தால் என் கணவர் இன்னும் சில காலம் சிகிச்சை பெற்று உயிருடன் இருந்திருப்பார் என்றால் சரியல்ல. என் கணவரின் இறப்பிற்கு நானும் ஒரு காரணம் என்பதால் எனக்கு பாகம் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல.

ஒம்/- ஸ்ரீரேகா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.